**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2024 இன்**

**அசல் வழக்கு எண்.105/2021**

இப்ராஹிம் பாதுஷா .... மனுதாரர்/ எதிர்நோக்கும் 2 ம் பிரதிவாதி

// எதிர் //

1) துர்கா ..... எதிர்மனுதாரர்/வாதி

2) கதிஜா பீவி ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது என் முன்பு இறுதியாக 06.08.2025 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. அருமைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பழனிவேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:20:34 +0530

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, இம்மனுவில் குறிப்பிட்டுள்ள நபரை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(1)(2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சுருக்கம்</u>:-**

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக காட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர் ஆவார் என்றும், அசல் வழக்கில் பிரதிவாதியாக உள்ள கதிஜா பீவி, மனுதாரரின் மனைவி ஆவார் என்றும், அசல் வழக்கில் உள்ள துர்காவின் தாயாரான அங்காளஈஸ்வரி என்பவரையே மனுதாரருக்கு தெரியும் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்/வாதியான துர்காவை, மனுதாரர் நேரில் கூட பார்த்தது கிடையாது என்றும், ஷை அங்காளஈஸ்வரி என்பவர் மனுதாரருக்கு அறிமுகம் என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட பண தேவை காரணமாக ஷை அங்காள ஈஸ்வரிடம் கடனாக ரூ.3,00,000/- (மூன்று இலட்சம்) பணம் கேட்டார் என்றும், அதற்கு ஷை அங்காள ஈஸ்வரி என்பவர் புரோநோட் எழுதி தந்தால் மட்டுமே பணம் தரமுடியும் என்றும், சாட்சி கையெழுத்து மனுதாரரின் மனைவி போடவேண்டும் என்றும் கூறினார் என்றும், எனவே மனுதாரரும், அவருடைய மனைவியும் சென்றபோது, மனுதாரரிடம் 2 காசோலைகளை தந்த அங்காள ஈஸ்வரி சில நாட்கள் கழித்து காசோலைகளை செலுத்தி பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என கூறினார் என்றும், மனுதாரரும்



RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2025.12.11 19:20:40 +0530

அதற்கு சம்மதித்து காசோலைகளை பெற்றுக் கொண்டு, 21.02.2018 தேதியில் புரோநோட்டில் மனுதாரர் கையெழுத்து செய்தார் என்றும், மனுதாரரின் மனைவி சாட்சி கையெழுத்து செய்தார் என்றும், மேற்படி காசோலைகளை மனுதாரரின் வங்கியில் மனுதாரர் கடந்த 13.03.2018 மற்றும் 15.03.2018 தேதிகளில் செலுத்தி பணத்தை பெற்றுக் கொண்டார் என்றும், அதன்பின்னர் செப்டம்பர் 2018 ல் அங்காள ஈஸ்வரியிடம் ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) மட்டும் செலுத்தினார் என்றும், மீதமுள்ள ரூ.2,00,000/- மாதந்தோறும் 5,000/- ரூபாய் வட்டியை செலுத்தி வந்தார் என்றும், கொரோனா காலமான 2020 மார்ச் முதல் மனுதாரர் வட்டியை செலுத்த இயலவில்லை என்றும், அங்காள ஈஸ்வரி மற்றும் அவரது மருமகன் கந்துவட்டி கேட்டு பிரச்சனை செய்ததால் மனுதாரர் அவருக்கு தெரிந்த நபர் மூலம் காவல்துறை இணையத்தளத்தில் புகார் செய்தார் என்றும், வை புகார் Complaint ID – RL12015208 ஆகும் என்றும், அசல் வழக்கு தொடர்பாக மனுதாரரின் மனைவி தற்போதுதான் மனுதாரரிடம் தெரிவித்தார் என்றும், பிராது விபரங்கள் அனைத்தும் தவறாகும் என்றும், மனுதாரரின் மனைவிக்கும், துர்காவிற்கும் எவ்வித சம்பந்தமும், தொடர்பும் கிடையாது என்றும், மனுதாரரின் மனைவி எந்த பணமும் பெறவில்லை என்றும், வாதி கருப்பொருள் விபரங்களை மறைத்து பிராது தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்தான் பணம் பெற்றார் என்றும், மனுதாரர்தான் வட்டி பணமும் அங்காள ஈஸ்வரியிடம் செலுத்தியுள்ளார் என்றும், பணம் கொடுத்தல் வாங்கல் தொடர்பாக மனுதாரருக்கு மட்டுமே தெரியும் என்றும், மனுதாரரின் மனைவிக்கு தெரியாது



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:20:45 +0530

என்றும், எனவே மனுதாரரை அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து அசல் வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், மனு அனுமதிக்கப்படாதபட்சத்தில் மனுதாரருக்கும், மனுதாரரின் மனைவிக்கும் பரிகரிக்க முடியாத அளவிற்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்**

மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கானது 2021 முதல் மூன்று வருடங்களாக இந்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றும், ஒரே வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்து வரும் இம்மனுவின் மனுதாரருக்கு இப்போதுதான் அசல் வழக்கு தொடர்பாக தெரியவந்தது என்று சொல்வது மிகவும் அபட்டமான பொய் என்பது தெளிவாகிறது என்றும், பிரதிவாதி பக்கம் சாட்சியம் அளிப்பதற்கு கடந்த 04.12.2024 முதல் இன்றுவரை வாய்தா அளிக்கப்பட்டுள்ளது என்றும், இருப்பினும், பிரதிவாதி பக்கம் சாட்சியம் அளிக்காமல் அசல் வழக்கு தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கும், வழக்கு விசாரணையை தாமதப்படுத்த வேண்டும் என்ற ஒரே கெட்ட எண்ணத்தில் இந்த மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் வழக்கிற்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:20:52 +0530

**4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u> :-**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள நபரை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கு தொடர்பாக மனுதாரரின் மனைவி தற்போதுதான் மனுதாரரிடம் தெரிவித்தார் என்றும், பிராது விபரங்கள் அனைத்தும் தவறாகும் என்றும், மனுதாரரின் மனைவிக்கும், துர்காவிற்கும் எவ்வித சம்பந்தமும், தொடர்பும் கிடையாது என்றும், மனுதாரரின் மனைவி எந்த பணமும் பெறவில்லை என்றும், வாதி கருப்பொருள் விபரங்களை மறைத்து பிராது தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்தான் பணம் பெற்றார் என்றும், மனுதாரர்தான் வட்டி பணமும் அங்காள ஈஸ்வரியிடம் செலுத்தியுள்ளார் என்றும், பணம் கொடுத்தல் வாங்கல் தொடர்பாக மனுதாரருக்கு மட்டுமே தெரியும் என்றும், மனுதாரரின் மனைவிக்கு தெரியாது என்றும், எனவே மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**6)** 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், ஒரே வீட்டில் கணவன் மனைவியாக வாழ்ந்து வரும் இம்மனுவின் மனுதாரருக்கு இப்போதுதான் அசல் வழக்கு தொடர்பாக தெரியவந்தது என்று சொல்வது மிகவும் அபட்டமான பொய் என்பது தெளிவாகிறது என்றும், இவ்வழக்கின் விசாரணையை தாமதப்படுத்த வேண்டும் என்ற ஒரே கெட்ட எண்ணத்தில் இந்த மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,



RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2025.12.11 19:20:58 +0530

இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் வழக்கிற்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**7)** அசல் வழக்கானது வாதி துர்கா என்பவரால் பிரதிவாதி கதீஜா பீவி என்பவர் ரூ.5,10,600/-ம், அசல் தொகை ரூ.3,00,000/-த்திற்கு வட்டியுடன் சேர்த்தும் வாதிக்கு கொடுக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. 21.02.2018 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கடனுறுதி சீட்டின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கடனுறுதி சீட்டில் மேற்கண்ட கதீஜா பீவி என்பவர் கையொப்பமிட்டு கொடுத்துள்ளதாகவும், அவரின் கணவர் இப்ராஹிம் பாதுஷா என்பவர் 1 வது சாட்சியாக கையொப்பமிட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டு, மேற்கண்ட கடனுறுதி சீட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.2 ஆக கொம்பையா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதியின் கணவரான இப்ராஹிம் பாதுஷா என்பவர் தன்னை 2 ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் சேர்க்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**8)** அசல் வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், பத்தி - 15 ல், பிரதிவாதியின் கணவரான இப்ராஹிம் பாதுஷா என்பவர் ஈஸ்வரி என்பவரிடம் 2017 ம் வருடம் ரூ.2,00,000/- கடன் கேட்டிருந்தார் என்றும், மேற்கண்ட



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:21:04 +0530

தொகையை 2017 ல் ஜூலை மாதம் பெற்றார் என்றும், மேற்கண்ட ஈஸ்வரி என்பவர் பதிவு புரோநோட் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கூறியதன் பேரில், பிரதிவாதியை ஆவண அலுவலகத்தில் சாட்சிக்காக கையொப்பமிட அழைத்ததாக சொல்லி கையொப்பம் பெற்றதாகவும், புரோநோட் மோசடியாக ஏற்படுத்தியுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது. மேலும், பத்தி - 18 ல், பிரதிவாதியின் கணவர் இப்ராஹிம் பாதுஷா என்பவர் அவசியமான தரப்பினர் என்றும், அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால், அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அசல் வழக்கில், அவசியமான தரப்பினரை அசல் வழக்கில் சேர்க்காத காரணத்தினால் அசல் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா என்று 2 வது எழுவினா வனையப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலையில்தான் பிரதிவாதியின் கணவரான இப்ராஹிம் பாதுஷா என்பவர் இம்மனுவை தாக்கல் செய்து, தன்னை 2 ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டுமென்று இம்மனுவில் பரிகாரம் கோரியுள்ளார்.

**9)** மேலும், இம்மனுவில் மனுதாரர் தரப்பில், ம.சா.ஆ.1 ஆக மனுதாரர் பெயரில் உள்ள வங்கி கணக்கு புத்தகத்தின் நகலும், ம.சா.ஆ.2 ஆக அங்காள ஈஸ்வரி மற்றும் அவரது மருமகன் மீது காவல்துறை இணையதளத்தில் மனுதாரர் கொடுத்த புகார் மனு Status நகலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே, அசல் வழக்கில், எதிர்வழக்குரையிலும், மேற்கண்ட இப்ராஹிம் பாதுஷா என்பவர் வாதியின் தாயாரான ஈஸ்வரி என்பவரிடம் கடன் பெற்றதாக சொல்லியுள்ள நிலையிலும், அசல் வழக்கு



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:21:09 +0530

அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்ற எழுவினா வனையப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட இப்ராஹிம் பாதுஷா என்பவரை இவ்வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்ப்பதால் இவ்வழக்கினை திறம்பட தீர்வு காண முடியும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மாறாக, வாதிக்கு எந்தவித இழப்பும் ஏற்பட போவதில்லை. எனவே, மனுதாரர் மனுவில் கூறியிருக்கும் காரணத்தை கருத்தில் கொண்டும், மனுதாரருக்கு அவரது வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையில் இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்ட கால விரையத்தை ஈடு செய்யும் வகையில் இந்த மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10)** முடிவாக மனுதாரர், எதிருரை தாக்கல் செய்த 1ம் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1,500/-ஐ 19.12.2025 அன்றோ அல்லது அதற்கு முன்போ வழங்கும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் மனு தானாக தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:21:15 +0530

இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:21:22 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | : | மனுதாரர் பெயரில் உள்ள வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் |
| ம.சா.ஆ.2 | : | அங்காள ஈஸ்வரி மற்றும் அவரது மருமகன் மீது காவல்துறை இணையதளத்தில் மனுதாரர் கொடுத்த புகார் மனு Status நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2025.12.11 19:21:28 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம், நான்குநேரி

இ.ம.எண்.1/2024 இன்

அ.வ.எண்.105/2021

நேரிய/வரைவு உத்தரவு

நாள்- 11.12.2025